People's Watch
No.6, Vallabai Road, Chokkikulam, Madurai - 625 002.
Phone: 0452-2531874 & 2539520 Fax: 0452- 2531874
E.mail: info@pwtn.org
Web: www.pwtn.org

**05.3.2011**

**மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்**
**தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகம்**
**அண்ணாசாலை**
**சென்னை 60002**

**மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு**

**மக்கள் கண்காணிப்பகத்தின் இனிய வணக்கம்.**

**மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு மக்கள் கண்காணிப்பகம் அமைப்பு கடந்த 15 ஆண்டுகளாக, தமிழக அளவிலும், 2006 முதல் இந்தியா முழுவதிலுமுள்ள 18 மாநிலங்களிலும், மனித உரிமைக் காப்புப் பணியில் சர்வதேச மனித உரிமை அமைப்புகளுடன் இணைந்து செயல்பட்டு வருகிறது.**

**எவ்வித அரசியல் கட்சி சார்புமின்றியும், தனி நபர் மீதான விருப்பு, வெறுப்புக்களைக் கடந்தும் மனித உரிமை அரங்கில் அரசைக் கண்காணித்து மனித உரிமைக் கலாச்சாரத்தை வளர்த்தெடுக்கும் விதமாக மனித உரிமைகளைக் காத்தல், வளர்த்தல், வாழ்நெறியாக்கல் என்ற முறையில் எங்களது பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தமிழகத்தில் கடந்த 01.3.2011 முதல் 4.3.2011 முடிய எங்கள் அமைப்பின் கவனத்திற்கு வந்த மனித உரிமை மீறல் செய்திகளை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம்.**

**1-3-2011 முதல் 4-3-2011 முடிய இவ்வாரத்தில் எங்கள் கவனத்திற்கு வந்த மனித உரிமை மீறல் செய்திகள்**

| | | |
|---|---|---|
| 1. | என்கவுண்டர்/காவல் மரணம் | – |
| 2. | சிறைக் கைதி மரணம் / வன்முறை | – |
| 3. | பெண்கள் மீதான வன்முறை | 28 |
| 4. | காவல் நிலையச் சித்திரவதை | 3 |
| 5. | வகுப்பறை வன்முறை | 5 |
| 6. | தலித்துகள் மீதான வன்முறை | 2 |
| 7. | அரசு அதிகாரிகள் / காவல் துறையினர் லஞ்சம் பெற்றது. | 2 |
| 8. | மருத்துவர்கள் அலட்சியம் | – |
| 9. | கொத்தடிமை | – |
| 10. | பெண் சிசு கொலை | – |
| 11. | குழந்தை திருமணம் | 1 |
| 12. | குழந்தை தொழிலாளர் மீட்பு/ வன்முறை | 10 |

| | | |
|---|---|---|
| 13. | மீனவர்கள் மீது தாக்குதல் | 1 |
| 14. | கந்து வட்டிக் கொடுமை | – |
| 15. | கட்டப்பஞ்சாயத்து / சமூகப் புறக்கணிப்பு | – |
| 16. | ரேசன் அரிசி கடத்தல் | 1 |
| 17. | மணல் கொள்ளை | 2 |
| 18. | திருநங்கைகள் மீதான வன்முறை | – |
| 19. | பழங்குடியினர் மீதான வன்முறை | – |
| 20. | முதியவர்கள் மீதான வன்முறை | 3 |
| 21. | மாற்றுத்திறனாளர்கள் மீதான வன்முறை | – |
| 22. | பொதுவானவை | 5 |
| | மொத்தம் | 63 |

மேற்கண்ட சம்பவங்களில் தாங்கள் உடனடியாகத் தலையிட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.

இதுபோன்ற காவல் மரணங்களும், சித்திரவதைகளும் தொடர்ந்து நிகழா வண்ணம் தடுக்க ஆவன செய்ய வேண்டுகிறோம்.

நன்றி,

நம்பிக்கையுடன் மனித உரிமைப் பணியில்



(ஹென்றி டிபேன்)
நிர்வாக இயக்குநர்

நகல்கள்:

தமிழகத் துணை முதல்வர்

தமிழகத் தலைமை நிலையச் செயலாளர் மற்றும் உயரதிகாரிகள்

அனைத்து மாவட்ட ஆட்சியாளர்கள்

தமிழகக் காவல்துறைத் தலைவர் மற்றும் உயரதிகாரிகள்

அனைத்து மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர்கள்

அனைத்து மனித உரிமை ஆணையங்கள்

அனைத்து அரசியல் கட்சிகள்

# தமிழகத்தில் மனித உரிமை மீறல்கள் - தொகுப்பு-9
## 1.3.2011 முதல் 4.3.2011 முடிய

| வ. எண் | செய்தி கிடைத்த நாள் | மாவட்டம் / பெயர் விபரம் மற்றும் சம்பவ விபரம் | பிரிவு | தகவல் பெற்றது. |
|---|---|---|---|---|
| 667. | 01.3.2011 | **திருச்சி மாவட்டம்:** மணப்பாறை வடடம், நடுப்பட்டி அரசு மேல் நிலைப் பள்ளியில் 9ம் வகுப்பு படிக்கும் தலித் சமுகத்தைச் சேர்ந்த தீபாவை வேதியில் ஆசிரியர் சேனாபார்க் திட்டியதோடு பிரம்பால் அடித்துச் சித்திரவதை. மனமுடைந்த மாணவி தீபா அரளி விதையை குடித்துத் தற்கொலை முயற்சி. | வகுப்பறை வன்முறை | பிரபாகர் |
| 668. | 01.3.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை டவுன் k. புதூர் காவல் நிலையத்தின் சார்பு ஆய்வாளர் பழனிச்சாமி 26.02.11 அன்று தலித் சமூகத்தைச் சேர்ந் சரவணனை கைது செய்தார். அதை விசாரிக்கச் சென்ற சிவபாலனை பழனிச்சாமி அடித்துச் சித்திரவதை. | காவல் நிலையச் சித்திரவதை | தினகரன் |
| 669. | 01.3.2011 | **சேலம் மாவட்டம்:** நெத்திமேடு, ஆஞ்சினேயர் கோவில் தெருவைச் சேர்ந்த பெருமாயி (90). சீரகம்பாடி தெருவைச் சேர்ந்த மாரிமுத்து பெருமாயியை பாலியலுக்கு முயற்சி. பெருமாயி மாரிமுத்து மீது புகார். மாரிமுத்து கைது. | முதியவர்கள் மீதான பாலியல் வன்முறை | தினகரன் |
| 670. | 01.3.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை வாடிப்பட்டி அருகே உள்ள கச்சை கட்டு தெற்குத்தெருவைச் சேர்ந்த தொத்தன் மகள் ராஜலட்சுமி(5). பக்கத்து வீட்டைச் சேர்ந்த மகாமணி(65),. மற்றும் அவரது மகன் மலபார் என்ற கருப்பு(45) இருவரும் சேர்ந்து சிறுமி ராஜலட்சுமியை கொலை செய்து நரபலி. | குழந்தைகள் மீதான வன்முறை & கொலை | தினத்தந்தி |
| 671. | 01.3.2011 | **மதுரை மாவட்டம்:** புதுஜெயில் ரோடு, முரட்டன்பத்திரியைச் சேர்ந்த பெரியகருப்பன் மகள் பவித்ரா. வேலைக்குச் சென்ற பவித்ரா விஷம் குடித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தினத்தந்தி |
| 672. | 01.3.2011 | **விழுப்புரம் மாவட்டம்:** மேற்குவங்க மாநிலம் ஹவுரா | பெண்கள் மீதான | தமிழ்சுடர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பகுதியைச் சேர்ந்த மகேந்திரதாஸ் மகள் பாஸ்வதிதாஸ்(21). சேலத்தை அடுத்த வாசுதேவநல்லூரில் தனியார்பொறியியல் கல்லூரியில் விடுதியில் தங்கி 3ம் ஆண்டு பொறியியல் படித்து வந்தார். விடுதியில் மாணவி பாஸ்வதிதாஸ் கொலை. | வன்முறை & கொலை | |
| 673. | 01.3.2011 | **விருதுநகர் மாவட்டம்:** அக்கனாபுரத்தைச் சேர்ந்த சேகர் மனைவி பஞ்சவர்ணம்(39). கணவன் மனைவி குடும்பத் தகராறில் சேகர் கத்தியால் குத்தியதாக பஞ்சவர்ணம் புகார். | பெண்கள் மீதான வன்முறை | தமிழ்சுடர் |
| 674. | 02.3.2011 | **பெரம்பலூர் மாவட்டம்:** குன்னம், தாலுகா, பேரலி அரசு மேல் நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியர் நல்லபெருமாள் +2 மாணவன் கிருஷ்ணமூர்த்தியை இரும்பு கம்பியால் தாக்கியதாக ஆசிரியர் மீது கிருஷ்ணமூர்த்தி புகார். | வகுப்பறை வன்முறை | தினகரன் |
| 675. | 02.3.2011 | **விழுப்புரம் மாவட்டம்:** செஞ்சி தாலுகா, மேல்சித்தாமூர் செல்லும்பாதை குண்டும் குழியாக இருப்பதால் கர்ப்பிணி பெண் கலா தனது கணவர் சீனிவாசனுடன் இரண்டு சக்கர வாகனத்தில் செல்லும் போது கீழே விழுந்து கர்ப்பம் கலைந்து மருத்துவமனையில் சிகிச்சை. இது குறித்து பலமுறை அரசு அதிகாரிகளுக்கு புகார் கொடுத்தும் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை என பொதுமக்கள் புகார். | பெண்கள் மீதான வன்முறை & அரசு அதிகாரிகள் அலட்சியம் | திருச்சி பிரபாகர் |
| 676. | 02.3.2011 | **விழுப்புரம் மாவட்டம்:** கள்ளிக்குறிச்சி தாலுகா, சூயாமேடு கிராமத்தைச் சேர்ந்த மூர்த்தி மனைவி கவிதா. கணவர் கூடுதல் வரதட்சணைக்கேட்டு சிகரெட்டால் சூடுபோட்டு சித்திரவதை செய்ததாக கவிதா புகார். | பெண்கள் மீதான வன்முறை & வரட்சணைக் கொடுமை | ஜெயராமன் |
| 677. | 02.3.2011 | **மதுரை மாவட்டம்:** செல்லூரில் வசிக்கும் சாரதா(75) கடந்த 26.2.11 சனிக்கிழமை மர்மமான முறையில் மரணம். இது தொடர்பாக 40 CHRM உறுப்பினர்களை செல்லூர் காவல் | காவல் நிலையச் சித்திரவதை | சதீஸ் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஆய்வாளர் கண்ணதாசன் விசாரணை என்ற பெயரில் மிரட்டி, அசிங்கமான வார்த்தையில் திட்டி அவமானப்படுத்தியதாக பாதிக்கப்பட்டவர்கள் புகார். | | |
| 678. | 02.3.2011 | **திருவண்ணாமலை மாவட்டம்:** சேத்துப்பட்டு அடுத்த தேவிகாபுரத்தில் அரசு மேல் நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியையின் செயல்பட்டை கண்டித்தும், அவரை பணியிட மாற்றம் செய்யக்கோரியும் பிளஸ்2 மாணவர்கள் முதன்மைக் கல்வி அலுவலருக்கு புகார். இந்நிலையில் அதிக அளவு கல்வி கட்டணம், மற்றும் ஹால் டிக்கெட் வழங்க பணம் வசூலிப்பதாக கூறி மாணவ, மாணவிகள் வகுப்புகளை புறக்கணித்து பள்ளி முற்றுகை. | வகுப்பறை வன்முறை | பாஸ்கரன் |
| 679. | 02.3.2011 | **திருவண்ணாமலை மாவட்டம்:** பேரணம்பட்டு அடுத்த மேல்கொத்தகுப்பம் கிராமத்தைச் சேர்ந்த வினோத்(55) மனைவி வேண்டா(45). வினோத் குடிக்க பணம் கேட்டு வேண்டா தர மறுப்பு. ஆத்திரமடைந்த வினோத் வேண்டாவை விறகு கட்டையால் தாக்கியதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர் |
| 680. | 02.3.2011 | **வேலூர் மாவட்டம்:** வாணியம்பாடி அடுத்த உதயேந்திரம் காந்தி தெருவைச் சேர்ந்த 21 வயது பி.பிஏ பட்டதாரி பெண்ணை அதே பகுதியைச் சேர்ந்த ரகுநாதன்(25) திருமணம் செய்து கொள்வதாக ஆசை வார்த்தை கூறி பாலியல் பலாத்கராம். இளம் பெண் 3 மாத கர்ப்பம். ரகுநாதன் திருமணம் செய்ய மறுத்தோடு கொலை மிரட்டல். | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | பாஸ்கரன் |
| 681. | 02.3.2011 | **வேலூர் மாவட்டம்:** வேலூர் வசந்தபுரத்தைச் சேர்ந்த மரியதாஸ் மகள் மேரி(20). அதே பகுதியைச் சேர்ந்த சீனிவாசன்(25). இருவரும் காதலித்தனர். இந்நிலையில் சீனிவாசன் வேறு பெண்ணைத் திருமணம் செய்யப்பேவதால் மனமுடைந்த மேரி தூக்கமாத்திரை சாப்பிட்டு வேலூர் காவல் நிலையம் முன்பு மயங்கி விழுந்து தற்கொலை | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | முயற்சி. | | |
| 682. | 02.3.2011 | **வேலூர் மாவட்டம்:** ஆற்காடு அடுத்த திமிரி அருகே உள்ள தாமரைப்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த பழனி(40) மனைவி மரகதம்(35). அதே பகுதியைச்சேர்ந்த சிவக்குமார்(29) மரகதத்தைச் பாலியல் பலாத்கராம் செய்ய முயன்றதாக சிவக்குமார் மீது மரகதம் புகார். | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கரன் |
| 683. | 02.3.2011 | **திருப்பூர் மாவட்டம்:** தேனியைச் சேர்ந்த யுவராஜ்(37) மனைவி ராஜீ(30). இரண்டு குழந்தைகள் உள்ள நிலையில் பூட்டிய வீட்டினுள் ராஜீ மர்மமான முறையில் மரணம். | பெண்கள் மீதான வன்முறை | வித்யா சாகர் |
| 684. | 02.3.2011 | **ஈரோடு மாவட்டம்:** மொடக்குறிச்சி, அரச்சலூர், மேற்கு வீதியைச் சேர்ந்த விஸ்வநாதன் மகள் ஜீவதா(18) பி.எஸ்.சி முதலாம் ஆண்டு படித்து வந்தார். தொலைபேசியில் தொடர்ந்து பேசிக் கொண்டு இருந்ததால் தாய் பர்வதம் கண்டித்தார். மனமுடைந்த ஜீவிதா தீக்குளித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | வித்யா சாகர் |
| 685. | 02.3.2011 | **தருமபுரி மாவட்டம்:** அரூர் தாலுகாவைச் சேர்ந்த சுரேஷ் மனைவி ஷியாமளா. கணவன் மனைவி குடும்பத் தகராறில் ஆத்திரமடைந்த சுரேஷ் மனைவி மற்றும் 3 குழந்தைகள் மீது கல்லைப்போட்டு கொலை செய்ததாக புகார். | பெண்கள் மீதான வன்முறை & கொலை | செந்தில்ராஜா |
| 686. | 02.3.2011 | **சென்னை மாவட்டம்:** கொடுங்கையூர் காவல் நிலையத்தில் திருட்டு வழக்கில் விசாரணைக்கு அழைத்து வரப்பட்ட பானு சித்திரவதை. காவல் நிலைய கழிவறையில் தூக்குப் போட்டுத் தற்கொலைக்கு முயற்சி. | காவல் நிலையச் சித்திரவதை | சன் டி.வி |
| 687. | 02.3.2011 | **கடலூர் மாவட்டம்:** பண்ருட்டி வனச்சரக அலுவலர் கிருஷ்ணமூர்த்தி முந்திரி காடு குத்தகைக்கான டெபாசிட் தொகையை திருப்பிக்கொடுக்க ரூ. 25 ஆயிரத்தை லஞ்சமாக வாங்கியபோது கிருஷ்ணமூர்த்தி காவலர்களால் கைது, | லஞ்சம் | ஜெயராமன் |
| 688. | 02.3.2011 | **திருப்பூர் மாவட்டம்:** | குழந்தைத் | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அனுப்பர்பாளையம் தண்ணீர் பந்தல், அண்ணா நகர் பகுதியைச் சேர்ந்த ராணி(13)க்கும் அதே பகுதியைச் சேர்ந்த பாண்டியன்(29)க்கும் நடக்க இருந்த திருமணத்தை காவலர்கள் தடுத்து நிறுத்தினர். | திருமணம் | |
| 689. | 02.3.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** நடுக்கடலில் மீன்பிடித்த ராமேசுவரம் மீனவர்களின் வலையை இலங்கை மீனவர்கள்அரிவாளால் வெட்டி கடலில் மூழ்கடித்ததாக பாதிக்கப்பட்ட ராமேசுவர மீனவர்கள் புகார். | மீனவர்கள் மீதான வன்முறை | தினமணி |
| 690. | 02.3.2011 | **மதுரை மாவட்டம்:** கடலூர் விருத்தாசலம் அருகே கருவேப்பிலங்குறிச்சியைச் சேர்ந்த வெள்ளையன், மகள் தனலெட்சுமி(11). வறுமையின் காரணமாக வீட்டு வேலைக்கு கொச்சின்–ஆலுவா பகுதியில் உள்ள ஜோஸ்குரியன்(35) சிறுமியை துன்புறுத்தி கொலை செய்ததாக புகார். | குழந்தைகள் மீதான வன்முறை & கொலை | தினமலர் |
| 691. | 02.3.2011 | **மதுரை மாவட்டம்:** மதிச்சியம் புளியந்தோப்பு பகுதியைச் சேர்ந்த மணிமேகலை அதே பகுதியைச் சேர்ந்த உறவினர் ஒருவரை காதலித்தார். காதலன் திருமணத்திற்கு மறுத்ததால் மனமுடைந்த மணிமேகலை விஷம் குடித்துவிட்டு வந்து காவல் நிலையத்தில் புகார் கொடுக்க வந்தபோது மயங்கி விழுந்த மணிமேகலையை காவலர்கள் மருத்துவமனையில் சேர்த்து சிகிச்சை. | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 692. | 02.3.2011 | **தேனி மாவட்டம்:** வருசநாடு ரேசன் கடையில் தமிழக அரசு வழங்கும் ரூ. 1 அரிசியை ரேசன் கடை ஊழியர் ரூ. 2 க்கு விற்பனை செய்வதாக பொதுமக்கள் புகார். கலெக்டர் முத்துவீரன் அதிரடி சோதனையில் ரேசன்கடை ஊழியர் 3 பேர் சஸ்பெண்ட். | ரேசன் அரிசி கடத்தல் | தமிழ்சுடர் |
| 693. | 02.3.2011 | **நாகை மாவட்டம்:** சிதம்பரம் காட்டுமன்னார்கோவில் மோவூர் கிராமத்தைச் சேர்ந்த தமிழரசியின் மகள்கள் லலிதா, மற்றும் ரத்னா(24). ரத்னாவுக்கும் லலிதாவின் கணவர் ராஜசேகருக்கும் கள்ளத்தொடர்பு. | பெண்கள் மீதான வன்முறை & கொலை | தமிழ்சுடர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ரத்னா கர்ப்பம். ரத்னா ராஜசேகர் இருவருக்கும் நடந்த வாய்த் தகராறில் ஆத்திரமடைந்த ராஜசேகர் ரத்னாவை கழுத்தை நெறித்து கொலை. | | |
| 694. | 02.3.2011 | **சென்னை மாவட்டம்:** சென்னை24 வயதுள்ள குத்துச்சண்டை வீராங்கனை சக பயிற்சியாளர் கே. கருணாகரன் பாலியல் ரீதியாக சித்திரவதை செய்ததோடு, போட்டிகளுக்கு அனுப்ப மறுப்பு. | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | Hindu |
| 695. | 03.3.2011 | **நாகை மாவட்டம்:** கும்பகோணத்தை அடுத்த பந்தநல்லூர் அருகே புழுதிக்குடி தெற்கு தெருவைச் சேர்ந்த ராமலிங்கம் மகன் வெங்கடேசன்(25). அதே பகுதியைச் சேர்ந்த பசுபதி மகள் பானுப்பிரியா(20). இருவரும் காதலித்தனர். காதலுக்கு பெற்றோர் எதிர்ப்பு தெரிவித்ததால் மனமுடைந்த காதல் ஜோடி தற்கொலை. | தற்கொலை | தினத்தந்தி |
| 696. | 03.3.2011 | **மதுரை மாவட்டம்:** கன்னியாகுமரி மாவட்டம் அருகே சுசீந்தரத்தைச் சேர்ந்த மூதாட்டி பகவதியம்மாள்(72) 10. ஆயிரம் பென்சன் வாங்கும் மூதாட்டியை மகள், மற்றும் மகன் பார்க்காததால் வழி தெரியாமல் மதுரை ரெயில் நிலைய பிளாட்பாரத்தில் பரிதவித்துக் கொண்டிருந்த மூதாட்டியை மீட்ட காவலர்கள் காப்பகத்தில் ஒப்படைத்தனர். | முதியோர்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 697. | 03.3.2011 | **கோவை மாவட்டம்:** தர்மபுரி ஊத்தங்கரையை பூர்வீகமாக கொண்ட கோவிந்தராஜ் மகள் அனுசுயா(7). உடையார்பாளையத்தில் மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் இரண்டாம் வகுப்பு படித்தார். பக்கத்து வீட்டைச் சேர்ந்த கோவிந்தன் சிறுமி அனுசுயாவை கொலை செய்து பாலியல். கோவிந்தன் கைது. | குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை | தினமலர் |
| 698. | 03.3.2011 | **கரூர் மாவட்டம்:** க.பரமத்தியைச் சேர்ந்தவர் பிரபு. இவர் கல்குவாரி தொடங்க அனுமதி கேட்டு கரூர் கலெக்டர் அலுவலகத்தில் இயங்கி | லஞ்சம் | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வரும் புவியியல் மற்றும் சுரங்கத்துறை உதவி இயக்குனர் ரவிச்சந்தினை அணுகினார். அவர் ரூபாய் 1.5 லட்சம் லஞ்சம் கேட்டதாக பிரபு புகார். லஞ்ச ஒழிப்பு அதிகாரிகளால் லஞ்சம் வாங்கும்போது ரவிச்சந்திரன் கைது. | | |
| 699. | 03.3.2011 | **திருப்பூர் மாவட்டம்:** காங்கயத்தில கார்மல் அரசு பெண்கள் மேல் நிலைப் பள்ளியில் பிளஸ் 2 படிக்கும் யோகாம்பிகை, ஹேமலதா கழிவறைக்கு சென்றனர். கழிவறை சுவர் இடிந்து விழுந்ததில் இருவருக்கும் இடுப்பில், மற்றும் கையில் காயம். | வகுப்பறை வன்முறை | தினகரன் |
| 700. | 03.3.2011 | **விருதுநகர் மாவட்டம்:** சாத்தூர் அருகே உள்ள ஓ. மேட்டுப்பட்டி செல்வரேணுகா திப்பெட்டித் தொழிற்சாலையில் தீ விபத்து ஏற்பட்டதில் 12 பேர் காயம். | தீப்பெட்டி ஆலை விபத்து | தீக்கதிர் |
| 701. | 03.3.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** பரமக்குடி அரசு கலைக்கல்லூரி மாணவர் ப.கார்த்திகைராஜா தன்னுடன் படிக்கும் மாணவியிடம் கல்வி சம்பந்தமாக பேசிக் கொண்ட இருந்தார். ஆனால், மாணவியை அடித்துத் துன்புறுத்தியதாக கல்லூரி முதல்வர், கல்லூரி காவலரிடம் புகார் எழுதி வங்கியுள்ளார். மனமுடைந்த சார்த்திகைராஜா தற்கொலைக்கு முயற்சி. | மாணவர்கள் மீதான வன்முறை | தீக்கதிர் |
| 702. | 03.3.2011 | **வேலூர் மாவட்டம்:** வேலூர் சத்துவாச்சாரி நகராட்சி 17 வது வார்டைச் சேர்ந்த மூதாட்டி கன்னியம்மாள்(60). இலவச டிவி கேட்டதற்கு, திமுக ஒன்றிய செயலாளரும், நகராட்சி தலைவரின் கணவருமான ஆர்.பி.எழுமலை கன்னியம்மாளை செருப்பால் அடித்துச் சித்திரவதை. | முதியவர்கள் மீதான வன்முறை & குழந்தைகள் மீதான வன்முறை | தீக்கதிர் |
| 703. | 03.3.2011 | **கிருஷ்ணகிரி மாவட்டம்:** கிருஷ்ணகிரி போச்சம்பள்ளி அரசம்பட்டி, வடமங்கலம் பகுதியில் உள்ள தென்பெண்ணை ஆற்றில் திருட்டுத் தனமாக மணல் அள்ளிய லாரியை வடடாட்சியர் பறிமுதல் செய்தார். | மணல் கொள்ளை | தீக்கதிர் |

| | | | | |
|---|---|---|---|---|
| 704. | 03.3.2011 | **திருப்பூர் மாவட்டம்:** தாராபுரம் சி.எஸ்.ஐ. பள்ளியில் படிக்கும் 6 மாணவர்களை ஆசிரியர் ஜான் கழிவறை சுத்தம் செய்யக் கூறி சித்திரவதை. மறுத்த மாணவர்களை ஆசிரியர் தாக்கியதில் காயமடைந்த மாணவர்கள் மருத்துவமனையில் சிகிச்சை. | வகுப்பறை வன்முறை | சசிகலா |
| 705. | 04.3.2011 | **வேலூர் மாவட்டம்:** வேலூர் வாணியம்பாடி தாலுகா, உதயேந்திரம் கிராமத்தைச் சேர்ந்த கிருஷ்ணன் மகள் பிரியா. அதே கிராமத்தைச் சேர்ந்த விஷ்னுகுமார் ஈவ் டீசிங் செய்ததாக பிரியா புகார். | ஈவ். டீசிங் & பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர் |
| 706. | 04.3.2011 | **வேலூர் மாவட்டம்:** அரக்கோணம் தாலுகா, சின்ன எஸ்லாபுரம் அருகே அருந்ததியர் பாளையத்தைச் சேர்ந்த திருமலை என்பரை ஆதிக்கச் சமூகத்தைச் சேர்ந்த ரோஸி நாயுடு அடித்துச் சித்திரவதை. | தலித்துகள் மீதான வன்முறை | பாஸ்கர் |
| 707. | 04.3.2011 | **கடலூர் மாவட்டம்:** கடலூர் அரசு பெரியார் கல்லூரி மாணவன் ராம்குமார். வகுப்பறையில் பேராசிரியர் திட்டியதால் மனமடைந்த மாணவன் வகுப்பறையிலேய விஷம் குடித்து தற்கொலைக்க முயற்சி. | மாணவர்கள் மீதான வன்முறை | அருள் HRD |
| 708. | 04.3.2011 | **கடலூர் மாவட்டம்:** கடலூர் பெரியகுப்பம் கிராமத்தைச் சேர்ந்த சங்கீதாவை அதே பகுதியைச் சேர்ந்த தட்சணாமுர்த்தி பாலியல் பலாத்காரம் செய்ய முயற்சி. | பெண்கள் மீதான வன்முறை | ஜெயராமன் |
| 709. | 04.3.2011 | **கடலூர் மாவட்டம்:** தென்பெண்ணையாற்றில் தொடர் மணல் கொள்ளையால் இரண்டு பள்ளி குழந்தைகள் இறந்துள்ளனர். தொடர்ந்து அக்கிராமக்கள் பாதிப்பிற்கு உள்ளாகி வருவதால் மக்கள் போராட்டம். | மணல் கடத்தல் & குழந்தைகள் மீதான வன்முறை | ஜெயராமன் |
| 710. | 04.3.2011 | **காஞ்சிபுரம் மாவட்டம்:** செங்கல்பட்டு தாலுகா, திம்மாபுரம் கிராமத்தில் வசிக்கும் ராஜ் மனைவி தனம். கணவர் கூடுதல் வரதட்சனைக் கேட்டு துன்புறுத்தியதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை & வரதட்சணைக் கொடுமை | ராஜா CHRM கிளை அமைப்பாளர் |

| | | | | |
|---|---|---|---|---|
| 711. | 04.3.2011 | **வேலூர் மாவட்டம்:** வாணியம்பாடி அருகே உள்ள நோதஜி நகர் பகுதியைச் சேர்ந்த 16 வயது மாணவி. பிளஸ் 2 படிக்கும் மாணவியை அதே பகுதியைச் சேர்ந்த அக்பர் கடத்திச் சென்றதாக மாணவியின் பெற்றோர் புகார். | குழந்தைகள் மீதான வன்முறை & கடத்தல் | பாஸ்கரன் (1.03.2011) |
| 712. | 04.3.2011 | **திருவள்ளூர் மாவட்டம்:** மணவாளநகர் அருகே காருண்யா நகரைச் சேர்ந்த செல்வம் (34) மனைவி ஜெயந்தி(30) மகள் ஜனனி(5). கணவன் மனைவி குடும்பத் தகராறில் மனமுடைந்த ஜெயந்தி மகளுக்கும் விஷம் கொடுத்து தானும் விஷம் குடித்துத் தற்கொலை முயற்சி. குழந்தை மரணம். ஜெயந்தி ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை. | பெண்கள் மீதான வன்முறை & குழந்தைகள் மீதான வன்முறை & தற்கொலை முயற்சி | பாஸ்கர் (1.03.2011) |
| 713. | 04.3.2011 | **சென்னை மாவட்டம்:** அம்பத்தூர் அருகே புதூர் பெருமாள்கோயில் தெருவைச் சேர்ந்த கரிகாலன்(33) மனைவி பேபி ஷாலினி(30). மனைவியின் நடத்தையில் சந்தேகப்பட்டு கணவன் மனைவி தகராறில் ஆத்திரமடைந்த கரிகாலன் மனைவியை வெட்டிக் கொலை. | பெண்கள் மீதான வன்முறை & கொலை | பாஸ்கர் |
| 714. | 04.3.2011 | **வேலூர் மாவட்டம்:** லத்தேரி அடுத் சோழமூர் கிராமத்தைச் சேர்ந்த 8ம் வகுப்பு மாணவியை அதே பகுதியைச் சேர்ந்த ராமராஜன்(21) பாலியல் பலாத்கராம். | குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை | பாஸ்கரன் |
| 715. | 04.3.2011 | **வேலூர் மாவட்டம்:** குடியாத்தம் அடுத்த பெரிய தோட்டாளத்தைச் சேர்ந்த அன்பு(32) மனைவி ரேகா(22 இருவருக்கும் கடந்த 14 தேதி திருமணம் நடந்தது. இந்நிலையில் ரேகாவை காணவில்லை என அன்பு புகார். | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கரன் |
| 716. | 04.3.2011 | **திருவண்ணாமலை மாவட்டம்:** வானாபுரம் அடுத்த தொண்டமானூர் தேன்பழனி கொல்லகொட்டாய் பகுதியைச் சேர்ந்த 5 வயது சிறுமியை அதே பகுதியைச் சேர்ந்த அஜீத்(18). பாலியல் பலாத்காரம். | குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை | பாஸ்கரன் |
| 717. | 04.3.2011 | **திருவண்ணாமலை மாவட்டம்:** | பெண்கள் | பாஸ்கரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பேராயம்பட்டு கிராமத்தைச் சேர்ந்த வள்ளி(24)க்கும் அதே பகுதியைச் சேர்ந்த முனியம்மா, வெங்கடேசன், திருமலை, காந்தி ஆகியோர் வள்ளியை கத்தியால் குத்தியதாக காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் வள்ளி புகார். | மீதான வன்முறை & கொலை முயற்சி | |
| 718. | 04.3.2011 | **வேலூர் மாவட்டம்:** சேத்துப்பட்டு அடுத்த தெள்ளூர் கிராமத்தைச் சேர்ந்த பிச்சாண்டி (45) மனைவி வசந்தா(35). பிச்சாண்டியின் நிலத்தில் அதே கிராமத்தைச் சேர்ந்த சுப்பிரமணி மாடு மேய்ந்ததால் இருவருக்கும் தகராறு. ஆத்திரமடைந்த சுப்பிரமணி அவரது மனைவி கன்னியம்மாள் மற்றும் உறவினர்கள் பிச்சாண்டி மற்றும் வசந்தாவை தாக்கியதாக வசந்தா புகார். | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கரன் |
| 719. | 04.3.2011 | **திருவண்ணாமலை மாவட்டம்:** ஆரணி கண்ணாமங்கலம் அடுத்த ஒண்ணுபுரம் கிராமத்தைச் சேர்ந்த கோவன்(36) மனைவி கவுரி(30). கடலாடி அடுத்த காந்தப்பாளையத்தில் உள்ள தனது தாய் வீட்டிற்கு சென்ற கவுரியை காணவில்லை என கோவன் புகார். | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கரன் |
| 720. | 04.3.2011 | **சென்னை மாவட்டம்:** தமிழகத்தில் உள்ள 4 அரசு இசைக்கல்லூரியில் ஒருவர் கூட தலித் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் பணியில் இல்லை. இந்த ஆண்டு புதிய ஆசிரியர்கள் நியமனத்திற்கான நடைமுறைகள் தொடங்கியதை அறிந்து தலித் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் விண்ணப்பித்தனர். தலித் சமூகத்தைச் சேர்ந்த யாரும் அழைக்கப்படவில்லை என தலித் மக்கள் புகார். | தலித்துகள் மீதான வன்முறை | தீக்கதிர் |

| | | | | |
|---|---|---|---|---|
| 721. | 04.3.2011 | **ஈரோடு மாவட்டம்:** ஈரோடு வீரப்பன் சத்திரத்தில் உள்ள அரசினர் மேல்நிலைப் பள்ளியில் படிக்கும் மாணவிகளில் சுமார் 70 சதவீகிதம் பேர் பேருந்தில் அரசு வழங்கிய பாஸ் முலம் பள்ளிக்குச் சென்று வருகின்றனர். மாலை நேரங்களில் அரசு பேருந்துகளில் ஏற முற்படும் மாணவ, மாணவிகளை ஒட்டுநகர்கள் பேருந்துகளை உரிய நிறுத்தத்தில் நிறுத்துவது இல்லை. அப்படியே மாணவிகள் அப்பேருந்துகளில் ஏறினால் நடத்துநர்கள் தகாத வார்த்தைகள் கூறி திட்டுவதாக மாணவிகள் புகார். | குழந்தைகள் மீதான வன்முறை | தீக்கதிர் |
| 722. | 04.3.2011 | **மதுரை மாவட்டம்:** ஊமச்சிகுளம் திருமால்புரம் காளியம்மன்கோயில் தெருவில் வசிப்பவர் செந்தில்குமார் மனைவி முத்துலெட்சுமி. முத்துலெட்சுமி தாயின் கள்ளக்காதவன் முனீஸ்வரன்(46) சொத்தில் பங்கு கேட்டு முத்துலெட்சுமியை கத்தியால் குத்தியதாக முத்துலெட்சுமி புகார். | பெண்கள் மீதான வன்முறை | தமிழ்சுடர் |
| 723. | 04.3.2011 | **சென்னை மாவட்டம்:** காஞ்சிபுரத்தைச் சேர்ந்த ராஜேந்திரன் ரியல் எஸ்டேட் அதிபர். சென்னை சூளையைச் சேர்ந்த தேவிஸ்ரீ மகள் பிரியா(14). 9ம் வகுப்பு படிக்கும் பிரியாவை திருமணம் செய்து கொள்வதாக ஆசை வார்த்தை கூறி ராஜேந்திரன் கடத்திச் சென்றதாக தேவிஸ்ரீ புகார். | குழந்தைகள் மீதான வன்முறை & கடத்தல் | தினத்தந்தி |
| 724. | 04.3.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** கூம்பூரைச் சேர்ந்த கல்லூரி மாணவி தனது செல் போனில் மர்ம நபர் ஆபாசமாக பேசுவதாக கூம்பூர் காவல் நிலையத்தில் புகார். காவல் விசாரணையில் கரூரைச் சேர்ந்த கல்லூரி மாணவர் பாலகிருஷ்ணன் பல பெண்களின் செல்போன் நம்பர்களை சேகரித்து ஆபாசமாக பேசியதால் கைது. | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 725. | 04.3.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** இந்தியா சுதந்திரம் பெற்று 63 ஆண்டுகள் கடந்து விட்ட நிலையில, குறைந்த | அடிப்படை வசதியின்மை | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பட்சம் மின் வசதி கூட இல்லாமல், திண்டுக்கல் ஊராட்சிக்குட்பட்ட தென்மலை கிராமத்தில் மக்கள் வெளிச்சத்திற்காக ஏக்கத்துடன் ஆண்டுக்கணக்கில் காத்திருப்பதாக பொதுமக்கள் புகார். | | |